

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள முத்துசாமி பிரதர்ஸ் இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் புதிய கிளை அச்சகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்து பெயர் மாற்றத்திக்காக விண்ணப்பித்த நபர்களுக்கு அரசிதழில் வெளியிடப்பட்டதற்கான ஆணையினை வழங்கினர். இதில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் வெ.ஷோபனா, மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், துணை பணி மேலாளர் ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் .சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# கோயில்களுக்குத் தரப்படும் ஒருகால பூஜை திட்ட நிதியை உயர்த்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – இனிகோ இருதயராஜ் கோரிக்கை!

சென்னை, ஏப்.14-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**எஸ். இனிகோ இருதயராஜ்:** திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் அருள்பாலிக்கும் காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கும், திருச்சி மேலபுலிவார் ரோடு சுந்தர தாஸ் பகுதியில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கும் எங்களுடைய கோரிக்கையை ஏற்று குடமுழுக்கு பணிகளுக்கு உத்தர விட்டு இன்றைக்கு பணிகள் நடைபெற்று வருவ தற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி, ஒரு கால பூஜை திட்டத்தில் இருக்கிற கோயில்களுக்கான தரப்படுகின்ற நிதி போதுமானது அளவில் இல்லை அந்த நிதி உயர்த்தி தரப்படுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** எல்லோருக்கும் எல்லாம் என்ற அரசுக்கு உதாரணமாக கிருத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர் இந்து திருக்கோயிலுக்கு நிதியை உயர்த்தித் தருவாரா என்று கேட்டிருக்கின்றார். தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஒரு கால பூஜை திட்டத்தில் இருக்கின்ற திருக்கோயில்களின் மீது அவரது கவனம் திரும்பியதால் அத்திருக்கோயில்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று இருந்த வைப்பு நிதியை இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார். அதோடு மட்டுமல்லாமல் அந்த இரண்டு லட்சம் ரூபாயும் போதாது என்ற காரணத்தினால் தற்போது 2.50 லட்சம் ரூபாயாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் வைப்பு நிதியை உயர்த்தி தந்திருக்கின்றார்.

அதோடு மட்டுமல்லாமல் 12,959 திருக்கோயில்கள் என்று இருந்து அந்த கோயில்களின் எண்ணிக்கையை 18,000 திருக்கோயி ல்களாக உயர்த்தியிருக்கின்றார். இந்த வகையில் எந்த ஆட்சியிலும் செய்யாத அளவிற்கு அரசினுடைய மானியமாக 310 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கிய பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும். மேலும், அந்தத் திருக்கோயி லில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்களுக்கும் பணியாளர்களுக்கும் எந்த விதமான பணி பாதுகாப்பும் இல்லை, எந்த விதமான ஊதியமும் இல்லை என்பதை அறிந்து முதல்வர் அவர்கள் அனைவரையும் வங்கி கணக்கை தொடங்கச் செய்து மாதம் ஆயிரம் ரூபாயை 18 ஆயிரம் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கும் வழங்குகின்ற ஒரு உன்னத திட்டத்தை ஏற்படுத்தியவர்.

அதோடு நின்றாரா என்றால் அதோடு நிற்கவில்லை. அந்த திருக்கோயிலிலே பணி புரிகின்ற அர்ச்சகர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பயில 2023 ஆம் ஆண்டு 400 மாணாக்கர்களுக்கும், 2024 ஆம் ஆண்டு 500 மாணாக்கர்களுக்கும் கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000 பத்தாயிரம் மற்றும் கல்வி உபகரணங்களையும் வழங்கினார். இந்த ஆண்டு சுமார் 600 மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்படி அனைத்து வசதிகளையும் செய்து தந்து பாராமுகமாக இருந்த ஒருகால பூஜைத்திட்டத்திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தான் அந்த ஒரு கால பூஜை திட்டத்தில் செயல்படுகின்ற அனைத்து திருக்கோயில்களிலும் இன்றைக்கு ஆண்டவன் மகிழ்ச்சியோடு இருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட பரசலூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டடத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து. நூலகத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்தார்கள். உடன் மாவட்ட கழகத் துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.. அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த..விஜயகுமார், மாவட்ட நூலக அலுவலர் சுமதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .சுமதி, மஞ்சுளா மற்றும் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி. சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அ.சுஜாதா, வணிகவரி ஈரோடு மாவட்ட இணை ஆணையர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், மாவட்ட ஆணையர் சு.சாந்தகுமார், இணை இயக்குநர் (சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்) குலால் யோகேஷ் விலாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்ட குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

சென்னை, ஏப்.14-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு, “கோவை மாவட்ட குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**செ.தாமோதரன்:** கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், பாலக்கரை ஊராட்சியிலே புதிய காலணியிலே குடிநீர் பிரச்சினை இருக்கிறது. இதுபற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் சொன்னதன் அடிப்படையிலே கடந்த ஆண்டு நீங்கள் அறிவிப்பிலே ஏழரை கோடி ரூபாய் செலவிலே அங்கே புதிய திட்டம் தொடங்கப்படும் என்று சொன்னீர்கள். இதுவரை, அந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை. தற்போது அங்கு குடிநீர் பிரச்சினை இருந்து வருகிறது. அரசு அலுவலர்களை கேட்கும் போது இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை, நிதி ஒதுக்கப்பட்டவுடன் tender வைக்கப்பட்டு திட்டம் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் இந்த ஆண்டு அதற்கு நிதி ஒதுக்கி அந்த திட்டம் தொடங்கப்படுமா?

**அமைச்சர் கே.என். நேரு:** பில்லூர்1, பில்லூர்2, பில்லூர்3, சிறுவாணி உள்ளிட்ட பல்வேறு குடிநீர் திட்டங்களின் மூலம் கோவைக்கு சுமார் 380 M.L.D. தண்ணீர் வருகிறது. ஆனால், சில இடங்களில் தண்ணீர் குறைவாகவும், சில இடங்களில் 7 நாட்களுக்கு ஒருமுறை, 3 நாட்களுக்கு ஒருமுறை என்ற அளவிலும்தான் தண்ணீர் வருகிறது என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். தற்போது, உறுப்பினர் அவர்களும் தற்போது கோரிக்கை வைத்துள்ளார்கள். துறையின் செயலாளர் அவர்களை தற்போது வரச் சொல்லியிருக்கிறேன்.

விரைவில் கோவை மாவட்ட குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விரைவில் அங்கு தனியாக ஒரு கூட்டம் நடத்தி, எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன காரணங்களால் தண்ணீர் குறைவாக வருகிறது, தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகியவற்றை எல்லாம் கேட்டறிந்து, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதாக அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இதே பதிலையே தங்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, கூடிய விரைவில், அதாவது, 2 நாட்களுக்குள்ளாக கோயம்புத்தூர் மாவட்ட குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, என்னென்ன செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று தீர்வு காணப்படும்.

மேலும், SUEZ என்ற தனியார் நிறுவனம் ஒன்று கோவையில் 60 வட்டங்களில் குடிநீர் வழங்கும் பணிகளைச் செய்து வருகிறது. கடந்தகால ஆட்சியில் வழங்கப்பட்ட திட்டம். அவர்கள் ஒரு நேரம் செய்கிறார்கள்; ஒரு நேரம் சாலையை வெட்டுகிறார்கள்; ஒரு நேரம் குழாய்களை உடைக்கிறார்கள். இப்படித்தான் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அதனால்தான் சில பிரச்சினைகள் ஏற்படுவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எ

னவே, தற்போது உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் கவனத்தில்கொண்டு, அந்த நிறுவனத்தாரையும் அழைத்துப் பேசி, இப்பிரச்சினை உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### கும்பகோணம் – திருவிடைமருதூர் ஒன்றியங்களில் – கீழ்காவேரி வடிநிலக் கோட்டத்தில்

# நீர்வளத்துறை சார்பில் - சிறப்பு தூர்வாரும் திட்டப்பணிகள்!

## அமைச்சர் கோவி.செழியன் – கொடியசைத்து துவங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சென்னை, ஏப்.14-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், திருவிடைமருதூர் ஒன்றியங்களில் நீர்வளத் துறை சார்பில் கீழ்காவேரி வடிநிலக்கோட்டம் தஞ்சாவூர் சார்பில் சிறப்பு தூர்வாரும் திட்டப் பணிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று முன்தினம் (12.4.2025) கொடியசைத்து துவங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், செயற்பொறியாளர் காவிரி வடிநிலக் கோட்டம் இளங்கோ, மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கும்பகோணம் வட்டத்தில் மானம்பாடி கிராமத்திலும், திருவிடைமருதூர் வட்டத்தில் வேப்பத்தூர் கிராமத்திலும் சிறப்பு தூர்வாரும் பணிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் தொடங்கி வைத்து தெரிவித்ததாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் டெல்டா பாசனத்திற்காக ரூ.85.97 கோடி மதிப்பீட்டில், 4760.02 கி.மீ நீளத்திற்கு ஆறுகள். கால்வாய்கள். வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் 795 தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போல இவ்வாண்டும் (2025 2026) திருச்சி. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட ஆறுகளில் தூர்வார அரசாணை (2D) எண்.9. நீர்வளத் (கே.1) துறை, நாள். 06.03.2025ல் 1071 பணிகள் 6179.60 கி.மீ நீளத்திற்கு ரூ.120 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் 291 தூர்வாரும் பணிகள் 1379.18 கி.மீ நீளத்திற்கு ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இன்று கும்பகோணம், திருவிடைமருதூரில் இப்பணிகள் துவங்கப்ப ட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் மே மாதம் இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்காணும் தூர்வாரும் பணிகள் செய்து முடிக்கப்பட்டவுடன் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்களில் கடந்த ஆண்டுகளைப் போல் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்குதடையின்றி பாசனத்திற்கு தண்ணீர் சென்றடைவதுடன், வெள்ளக்காலங்களில் பயிர்களுக்கு எவ்வித சேதங்கள் ஏதுமின்றி வெள்ள நீர் விரைவாக வடிவதற்கு ஏதுவாக இருக்கும்.

நடப்பாண்டு தூர்வாரும் பணி மேற்கொள்வதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட அனைத்து வேளாண்பெருங்குடி மக்கள் மற்றும் பொதுமக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் உதவி செயற்பொறியாளர்கள் யோகேஸ்வரன், மனோகரன், சிவகுமார், முத்துமணி, உதவி பொறியாளர்கள் திருமதி.பூங்கொடி, ஆசைதம்பி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணி!

## சட்டப்பேரவையில் – மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விளக்கம்!

சென்னை, ஏப்.14-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-



**கா.இராமச்சந்திரன்:** கடந்த ஐந்து மற்றும் ஆறு தேதியன்று முதலைமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். இந்த ஆட்சியில் சுமார் 981 கோடி ரூபாய் மருத்துவத் துறைக்கு மட்டும் வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொடுத்து, கட்டடங்களை கட்டிக் கொடுத்து, hospital திறந்து இன்றைக்கு நீலகிரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் மருத்துவத் துறையில் இருந்தது. இன்றைக்கு தன்னிறைவு பெற்ற மாவட்டமாக செய்து தந்ததற்கு முதலில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலா மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் அதிகமான கனமழை மற்றும் புயல் காற்று வீசுவதால் அங்குள்ள மின்சார கம்பிகள்மீது பெரிய மரங்கள் விழுந்து நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தொடர்ந்து மின்சாரத் துண்டிப்பு ஏற்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட மின்சார கம்பிகளை சரி செய்வதற்கு ஒருநாள் முதல் ஒரு வார காலம் ஆகின்றன. இந்தச் சூழ்நிலையில் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் குழந்தைகள் படிப்பதற்கு மின்சாரம் இல்லாமல், படிப்புகள் பாதிக்கப்படுகின்றன.

மேலும், நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக இருப்பதால் மின்சாரத்தை பயன்படுத்தி வீடுகளில் செய்யவேண்டிய வேலைகள் செய்ய முடியாமல், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் மனித மற்றும் விலங்குகளுக்கு உயிர் சேதமும் ஏற்பட்டு வருகிறது.

எனவே, இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண, மலை மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் தேவைப்படும் பகுதிகளில் மின் கம்பங்களில் செல்லும் மின்சார கம்பிகளுக்கு பதிலாக, பூமிக்கு அடியில் செல்லும் மின்சார cable பதித்து, புதைவட கம்பிகள்மூலம் மின்சாரம் எடுத்துச்செல்ல, நடவடிக்கை எடுக்கப்படுமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** நீலகிரி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு, அரசு கொறடா அவர்களுடன் சென்று அந்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கி விரைவாக அந்தப் பணிகளை மேற்கொண்ட பொழுது நீலகிரி மாவட்டத்தில் குடிநீர் வினியோகம் செய்யக்கூடிய அந்தப் பகுதிகளுக்கு புதைவடக் கம்பிகள் அமைக்கவேண்டுமென்று அப்போது கோரிக்கை வைத்தார்கள்.

முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அதற்கான பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையில் மீண்டும் மாவட்டம் முழுவதும் புதைவட கம்பிகள் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார். மழைக் காலங்களில் மிகுந்த பாதிப்புகள் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மின்வாரியத்தின் நிதிநிலையை கவனத்தில் கொண்டு வரக்கூடிய ஆண்டுகளில் கண்டிப்பாக தேவை ஏற்படக்கூடிய அந்த இடங்களில் மட்டும் கணக்கெடுக்கப்பட்டு, அரசு முன்னுரிமை கொடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



நாகை மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழக. தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கீழையூர் மேற்கு ஒன்றியம், எட்டுக்குடி பாரதமாதா முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு போர்வை, வேட்டி, புடவை மற்றும் உணவு ஆகியவற்றை மாவட்ட செயலாளரும்,,தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் வழங்கினார்,உடன் கீழையூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சோ.பா. மலர்வண்ணன். பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார்,தகவல் தொழில்நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன்,,துணை ஒருங்கிணைப்பாளர்கள் செல்வ முத்துக்குமரன்,ரெக்ஸ், ஒன்றியக் கழகப் பொருளாளர் வை. சண்முகசுந்தரம், மற்றும் பலர் உள்ளனர்